மாதாந்த விபரக் கொத்து

# ஆய்வு

2024 ஜனவரி
மக்கள் விடுதலை முன்னணியின்
கல்விப் பிரிவின் வெளியீடு

உலகை மாற்றுவதற்கு மாறுவோம்!

# வரவு - செலவு திட்ட செலவினங்கள்

**இலங்கையில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பித்தலானது முன்னர்போலவே நடைபெற உள்ளது. வங்குரோத்து நிலையுற்ற முதலாளித்துவ பொருளாதாரத்தின் வரவு-செலவு என்பது நாடு வீழ்ந்துள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கவல்ல அல்லது குறைந்தபட்சம் அந்த நெருக்கடியைத் தீர்த்துவைக்கின்ற திசையை நோக்கிப் பயணிக்கின்ற ஒன்றாக அமையவேண்டும். எனினும் பலதசாப்தங்களாக பெற்றுள்ள அனுபவத்தின்படி இந்த ஆண்டின் வரவு-செலவும் முந்திய வருடங்களைவிட வித்தியாசமானதாக அமைய இடமில்லை. அது தொடர்ந்தும் பொருளாதாரத்தையும் மக்கள் வாழ்க்கையையும் நெருக்கடிக்குள் அனுப்பி வைக்கின்ற வரவு-செலவாக அமையுமென்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது.**

வரவுசெலவு ஒன்றினை முன்வைக்கையில் அரசாங்கமொன்று பொதுவில் எதிர்பார்க்கின்ற பல நோக்கங்கள் இருக்கின்றன.

1. வளங்களின் பயன்பாடு - அதற்கிணங்க நாட்டின் வளங்கள் சமூக மற்றும் பொருளாதார நன்மைகள் கிடைக்கின்ற விதத்தில் பகிர்ந்துசெல்ல நடவடிக்கை எடுப்பது ஒரு நோக்கமாகும்.
2. உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்ற வகையில் பொருளாதார செயற்பாடுகளை நெறிப்படுத்துதல். அதன்கீழ் அவசியமான வரிச்சலுகைகள் மற்றும் மானியக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.
3. நியாயமான வருமான மற்றும் செல்வம் பகிர்ந்து செல்லலை வரவு-செலவு ஊடாக ஈடேற்றிக்கொள்ள முடியும்.
4. பொருளாதார உறுதிநிலையைப் பெற்றுக்கொள்ளல் மற்றுமொரு நோக்கமாகும். குறிப்பாக வங்குரோத்து நிலையுற்ற பொருளாதாரத்திற்கு இந்த நோக்கம் மிகவும் முக்கியமானதாகும்.
5. அரச நிறுவனங்களை வினைத்திறனும் பயனுறுதியும் கொண்டவையாக முகாமைத்துவம் செய்வதற்காகவும் வரவு-செலவு பாவிக்கப்பட்டு வருகின்றது.
6. பொருளாதார வளர்ச்சியை பெற்றுக் கொள்வதும் வரவுசெலவின் முதன்மைப் பணியாகும்.
7. பிரதேசரீதியான வேற்றுமைகள் நீக்கப்படுகின்றவகையில் பொருளாதார செயற்பாடுகளை நெறிப்படுத்துவதும் வரவு-செலவின் பிரதான நோக்கமாகும்.

| 2024 வரவு-செலவு திட்ட சுருக்கம் (பில்லியன் ரூபாய்) | | | | |
|---|---|---|---|---|
| விபரம் | வருடம் | | | |
| | 2024 | 2023 | 2022 | 2021 |
| மீழ்சுழற்சி செலவு | 2720 | 2445 | 1954 | 1699 |
| வட்டி செலுத்தல் | 2634 | 2189 | 1565 | 1048 |
| மூலதன செலவு | 1209 | 1220 | 953 | 774 |
| மொத்த செலவு | 6563 | 5845 | 4473 | 3522 |
| கடந்த வருடத்தை விட அதிகரிப்பு வீதம் | 12.2மூ | 30.6மூ | 27.0மூ | |

| | | பில்லியன் ரூபாய் | |
|---|---|---|---|
| விபரம் | 2024 | 2023 | வித்தியாசம் |
| பாதுகாப்பு | 424 | 410 | 14 |
| சுகாதாரம் | 410 | 323 | 88 |
| கல்வி | 237 | 232 | 5 |
| நிதி | 791 | 551 | 240 |
| பெண்கள், சிறுவர் மற்றும் சமூக நலன்புரி | 75 | 152 | -77 |
| போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை | 404 | 375 | 29 |

மேலே குறிப்பிட்ட வரவு-செலவு நோக்கங்களை இத்தடவையும் அடையமுடியாதென்பதில் எந்தவிதமான வாதமும் கிடையாது. இன்றளவில் 2024 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அதன் செலவுகளின் பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

மேற்படி அட்டவணையின்படி கடந்த இரண்டு வருடங்களைப் பார்க்கிலும் செலவு அதிகரிப்பது குறைவடைந்துள்ளதோடு அதற்கான பிரதான காரணம் பொருளாதாரம் சுருங்கியதாகு ம். இத்தடவை வரவுசெலவில் ரூபா ஆறாயிரம் பில்லியனைவிட அதிகமாக செலவிட அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

இந்த ஆறாயிரத்து ஐந்நூறு பில்லியன் ரூபாவை அரசாங்கம் நேரடியான மற்றும் மறைமுகமான வரி ஊடாகவே ஈட்டிக்கொள்ள நேரிடும். அவ்விதம் வரி ஊடாக ஈட்டிக் கொள்கின்ற வருமானத்தை செலவிட எதிர்பார்த்துள்ள பல பிரிவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

கீழ்க்காணும் செலவுகளின் வகைப்படுத்தலுக்கிணங்க அரசாங்கம் நிதி அமைச்சிற்கே அதிகமான பணத்தொகையை ஒதுக்கியுள்ளது. அது 240 பில்லியன் ரூபா அதிகரிப்பாகும். எனினும் கல்விக்காக ஐந்து பில்லியன் ரூபா மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக நலன்புரிச் செலவுகள் ஏறக்குறைய அரைவாசி குறைக்கப்பட்டுள்ளதோடு அது 77 பில்லியன் ரூபாவாகும்.

மறுபுறத்தில் இலங்கை அரசாங்

# நீரை விற்பனை செய்கின்ற திட்டமும் தேசிய நீர்வளங்கள் கொள்கையும்

**நவலிபரல் பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்துகின்ற நாடாக நிலவிய அரசாங்கங் களும் நடப்பு அரசாங்கமும் நாட்டின் இயற்கை வளங்களைக்கூட பணத்திற்காக விற்பனை செய்கின்ற செயற்பாங்கில் ஈடுபடுவது யதார்த்தமாக மாறியுள்ளது. 1997 பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் "நீர் முகாமைத்துவச் சட்டம்" ஊடாகவும் 2002 - 2004 காலப்பகுதிக்குள் நிலவிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்றக் காலத்திலும் அமுலாக்கப்பட்ட "இலங்கையை மீளக்கட்டியெழுப்புதல்" (Regaining Sri lanka) நிகழ்ச்சித்திட்டம் மூலமாகவும் நீரை தனியார்மயமாக்கும் செயற்பாங்குகளை நடைமுறைப்படுத்த எத்தனித்தபோதிலும் மக்கள் எதிர்ப்பின் மத்தியில் அது சுருட்டிக்கொள்ளப்பட்டது.**



2023 யூலை 10 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை அறிவிப்பதற்காக அமைச்சரவை அலுவலகத்தின் செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தின்படியே தற்போது இந்த உரையாடல் தோன்றியுள்ளது. மீண்டும் அதற்காக சட்டமொன்றை வகுக்க அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்துள்ளதெனவும் அந்த அலுவல்களை நடாத்தி வருவதற்காக பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சீ.எம். மத்துமபண்டாரவின் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளையில் காலநிலை மாற்றங்கள் பற்றிய சனாதிபதி ஆலோசகர் எரிக் சோல்ஹயிம் இந்த செயற்பாங்கிற்குள் இருப்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். மேற்சொன்ன நீர் முகாமைத்துவ சட்டத்தை வகுக்கும் தேவையைப்பற்றி அபிவிருத்திக்கான சர்வதேச பங்காளிகளும் ஆர்வத்துடன் இருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

நீர் முகாமைசெய்யப்பட வேண்டுமென்பதற்கான நோக்கங்களை தெளிவு-படுத்துதல் வழமைபோல் எவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்போது கடந்த தசாப்தத்தில் உலகம் பூராவிலும் நிலவிய கடுமையான காலநிலை மாற்றங்களுக்கு முதன்மையாக இலக்காகிய நாடுகளிலொன்றாக இலங்கை இனங்காணப்பட்டுள்ளது. இந்நாட்டின் உலர் வலயத்தின் மழைவீழச்சி குறைவடைந்து கடும் வறட்சி தோன்றுதல், ஈர வலயத்தின் மழைவீழ்ச்சி அதிகரித்து வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தல் அதிகரித்தல் அவர்களின் அவதானிப்பிற்கு இலக்காதகியுள்ளது. அதனால் குடிநீர், நீர்ப்பாசன, வலுச்சக்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக இந்நாட்டின் வரையறுக்கப்பட்ட நீர் வளங்களை உச்ச அளவில் பாவிப்பதற்கான கொள்கையொன்றை தயாரிக்கவேண்டியது தேசிய அவசியப்பாடென விடயங்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

இலங்கையில் வருடாந்தம் பாவிக்கப்படுகின்ற ஒட்டுமொத்த நீரின் அளவு 13 மில்லியன் கன மீற்றராகும். அதில் நூற்றுக்கு 87 சதவீதம் விவசாயத்திற்கும், நூற்றுக்கு 06 சதவீதம் கைத்தொழில் துறைக்காகவும் நூற்றுக்கு 06 சதவீதம் குடிநீர்த் தேவைக்காகவும் பாவிக்கப்படுகின்றது. இலங்கைக்கு வருடந்தோறும் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி ஆறுகள், கால்வாய்கள், ஓடைகள், குளங்கள், அணைக்கட்டுகளில் தேங்குகின்ற மேற்பரப்பு நீரையும் தரைக்கீழ் நீரையும் எடுத்துக்கொண்டால் 130 மில்லியன் கனமீற்றருக்கு கிட்டிய நீர்வளம் நிலவுகின்றது. 103 ஆறுகள் ஊடாக வருடந்தோறும் கடலை நோக்கிப் பாய்கின்ற நீர்ப்பிரவாகம் பிரமாண்டமானது.

நாட்டை ஒட்டுமொத்தமாக கருத்திற்கொண்டு ஈரவலயத்தில் வெள்ளப்பெருக்கு தோன்றுகின்ற அளவுக்கு கிடைக்கின்ற மாபெரும் நீர்ப்பிரவாகத்தை உலர் வலயத்திற்கு வழங்குவதற்கான விஞ்ஞானரீதியான முறையியலைத் தயாரிப்பதற்கும் முகாமை செய்வ-தற்குமான திட்டங்களை வகுப்பதே சரியானதாகும். எனினும் நீர் முகாமைத்துவம் என கொண்டுவரப்படுகின்ற ஒவ்வொரு முன்மொழிவினதும் உட்பொருளாக அமைவது தற்போது நுகர்கின்ற 13 பில்லியன் கனமீற்றருக்கு கிட்டிய நீர் வளங்களின் முகாமைத்தவத்திற்கான திட்டங்களை வகுப்பதாகும்.

அதற்கு இணையானதாக மின்சார சபையைத் துண்டாடி கம்பெனிகளாக விற்கின்ற திட்டத்தையும் நுணுக்கமாக ஆராய்வது முக்கியமானதாகும். மின் நிலையங்களை தனியார்துறைக்கு விற்பனைசெய்த பின்னர் அவர்கள் முன்புபோல் நீரை விடுவிக்க மாட்டார்கள். அவற்றுக்காக கட்டணம் செலு-த்தவேண்டி நேரிடும். கைத்தொழில் தேவைகளுக்கான நீர் விற்பனை வசதியானதாக அமையும். குடிநீருக்கும் அப்படியே. விவசாயத்திற்காக நீரை வழங்குவதற்காக விலை அறவிடப்படும்போதே மிகவும் கடினமான பணியாக அமையும். உதாரணமாக ஒரு ஏக்கர் காணியை பயிர்செய்ய 4.5 ஏக்கர்அடி நீர் அவசியமாகின்றது. அது ஏறக்குறைய 12,34,420 லீற்றர்களாகும். ஒரு லீற்றர் 01 சதம் என விலை குறித்தாலும் ஏக்கரொன்றுக்காக ரூபா 12,344.00 இற்கு கிட்டிய தொகை என்றவகையில் ஏக்கருக்கு அவசியமான நீர் 4.5 ஏக்கர் அடிக்காக அண்ணளவாக ரூபா 50,000.00 இற்கு கிட்டிய தொகையை செலுத்தவேண்டி நேரிடும்.

"இலங்கையை மீளக் கட்டியெழுப்பு-தல்" நிகழ்ச்சித்திட்டத்தில் கிணற்று நீருக்காகவும் வரியைச் செலுத்தவும்

# இந்திய - இலங்கை புதிய பொருளாதார உடன்படிக்கையொன்று?

**இந்தியா தெற்காசியாவின் பலம்பொருந்திய நாடு என்றவகையில் பிராந்திய நாடுகளை நோக்கி பொருளாதார, யுத்தரீதியான, கலாசார மற்றும் அரசியல் என்றவகையில் அனைத்துத் துறை களிலும் அதிகாரத்தை விஸ்தரிக்க செயலாற்றி வருகின்றமை வரலாற்று முழுவதிலும் காணக்கூடியதாக இருந்தது. இதன்போது தனது பொருளாதார ஆதிக்கத்தை விரிவுபடுத்தவதற்கான கிட்டிய நாடாக இலங்கையை இரையாக்குவதற்காக பலவிதமான அணுகுமுறைகள் களமிறக்கப்படுகின்றன. ஒத்துழைப்பு, இருதரப்பு ஆகிய பெயர்களில் வந்த (SEFTA) (CEPA) உடன்படிக்கைகள் இங்கு ஞாபகத்திற்கு வருகின்றன.**

அவற்றை நடைமுறைப்படுத்துகையில் அந்தந்த தருணங்களில் தோன்றிய எதிர்ப்புகள், உரையாடல்கள் போன்றவை காரணமாக ஒட்டுமொத்தமாக ஒரே தடவையில் இரையாக்கிக்கொள்ள வாய்ப்புகள் கிடைக்காவிட்டாலும் படிப்படியாக வேறு வடிவங்களில் அவை தற்போதும் அமுலாகி வருகின்றன. எனினும் முழுமையடையாத முந்திய இணக்கப்பாடுகள் மற்றும் மீண்டும் மீண்டும் இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்காக முந்திய எல்லைகளுக்கு அப்பால் உள்ள அவசியப்பாடுகளுக்கான புதிய அணுகுமுறைகள் இனங்காணப்படவேண்டி உள்ளன.

கடந்த யூலை மாதம் 21 ஆம் திகதி சனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் மத்தியில் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பிரதமர் நரேந்திர சிங் மோடிக்கும் இடையிலான சந்திப்பு அதன்படியே கவனத்திற்கு இலக்காகியது. வழமைபோல அங்கு தலைவர்கள் இருவரும் அந்த சந்திப்பு இரண்டு நாடுகளினதும் வரலாற்றுரீதியான உறவுகளை உறுதிப்படுத்துகின்ற ஒரு தருணமெனக் கூறினார்கள். இலங்கை நிகழ்காலத்தில் எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியின்போது இந்தியா வழங்குகின்ற தாராளமான ஒத்துழைப்பு “உதவிகள்” கவனிப்பு பற்றி சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது விசேட நன்றியைத் தெரிவித்துக்கொண்டதோடு வருங்காலத்திலும் இந்தியாவின் ஒத்துழைப்பும் முதலீடு



களும் அவசியமென்பதை மென்மேலும் வலியுறுத்திக் கூறினார்.

பல்வேறு துறைகள் சம்பந்தமாக இத்தடவை அவர்கள் வந்த இணக்கப்பாடுகளில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு,

### ■ கடல்சார் தொடர்புகள் (Nautical Connectivity)

பிராந்திய தொழிற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைத்தலை நோக்கமாகக்கொண்டு இலங்கையின் கொழும்பு, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்களின் செய்முறைக்குள்ளாக்கல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக ஒத்துழைத்துச் செயலாற்றுதல்.

இந்தியாவின் நாகபட்டினத்திற்கும் காங்கேசன்துறைக்கும் இடையில், இந்தியாவின் இராமேஷ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையில் மற்றும் இணங்கிய ஏனைய இடங்களுக்கிடையில் பயணிகள் கப்பல் மற்றும் மிதவைப் படகுச்சேவையை விரைவில் ஆரம்பித்தல்.

### ■ வான் தொடர்புகள் (Air Connectivity)

யாழ்ப்பாணத்திற்கும் சென்னைக்கும் இடையில் விமானச் சேவை ஆரம்பிக்கப்படுவதை ஊக்குவித்தல், அதனை கொழுப்பு வரை நீடித்தல், மேலும் திருகோணமலை, மட்டக்களப்பு வரை அதனை இணைத்தல் மற்றும் நாட்டின் இனங்காணப்பட்ட ஏனைய இடங்கள் வரை விமானசேவையை விஸ்தரித்தல்.

சிவில் மற்றும் வான் சேவைகள் துறையில் முதலீட்டினையும் ஒத்துழைப்பினை விருத்திசெய்தலும் பலாலி விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல். இந்தியா துரிதமாக கைப்பற்றிக்கொண்ட டிஜிட்டல் தொழில்நுட்ப முன்னேற்றம், அதனோடு தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை இலங்கையின் பொருளாதார மற்றும் நிருவாகத் துறைகளின் விருத்திக்காக பாவித்தல்.

பிரஜைகளை மையமாகக்கொண்ட பயனுறுதிமிக்க மற்றும் வினைத்திறனுடைய சேவைகளை வழங்குவதற்காக ஈடுபடுத்துதல்.

### ■ ஆட்களுக்கிடையிலான தொடர்புகள் (People to People Connectivity)

இலங்கையின் சுற்றுலாத்துறை மேம்பாட்டினை அடிப்படையாகக்கொண்டு இந்திய பௌத்த சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டுதல் மற்றும் அவர்களுக்கிடையில் சுற்றுலா அலுவல்களை மேம்படுத்துவதற்காக இலங்கையுடன் பின்னிப்பிணைந்த இராமாயண இலக்கியத்தை பிரபல்யப்படுத்துதல். இலங்கையில் உள்ள பௌத்த, இந்து மற்றும் ஏனைய சமய வழிபாட்டுத் தலங்களை மேம்படுத்துதலும் பிரபல்யப்படுத்துதலும். இருதரப்பினரதும் கல்வி நிறுவகங்களின் ஒத்துழைப்பின்பேரில் புதிய உயர்கல்வி நிறுவகங்களையும் திறன் மேம்பாட்டு நிறுவகங்களையும் இலங்கையில் நிறுவுதல். இதன்போது இலங்கையின் கல்வித்தேவைகள் மற்றும் அமைந்தொழுகல்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


விவசாயம், நீரின வளர்ப்பு,தகவல் தொழில்நுட்பம், தொழில்முயற்சியும் நிதி முகாமைத்துவமும், சுகாதாரமும் மருத்துவவியலும், விண்வெளியியல் போன்றே வரலாறு, கலாசாரம், மொழி இலக்கியம், சமய அலுவல்கள் கற்கைகள் மற்றும் பிற துறைகளிலான ஆராய்ச்சிகளும் கல்வி நிறுவகங்களுக்கிடையிலான விரிவான ஒத்துழைப்பினை ஏற்படுத்த செயலாற்றுதல் போன்றே பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில் செயலாற்றுதல்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் தரைமார்க்க தொடர்பினை ஏற்படுத்த செயலாற்றுதல். அதன்போது திருகோணமலை துறைமுகம் மற்றும் கொழும்புத் துறைமுகத்திற்கும் இடையில் தரைவழி அணுகல் வீதியை அபிவிருத்திசெய்தல். மேற்படி வீதி

# மானிடப் பரிணாமம் பற்றிய நவீன முற்றாய்வு

(கடந்த இதழின் தொடர்ச்சி)




ஆஸ்த்ரலொபிதிகஸ் அஃபரன்சிஸ் கென்யன்த்றோபஸ் பிளெட்டியொபஸ்களால் பாவிக்கப்பட்டதாக கருதப்படுகின்ற கல்லிலான ஆயுதங்கள்

### கென்யன்த்ரோபஸ் (Kenyanthropus)

இதற்கு முந்திய கட்டுரை மூலமாக ஆராய்ந்த ஆஸ்த்ரலொபிதிகஸ் இனத்தைப்போன்றே பெரென்த்ரோபஸ் இனங்களின் உடற்பண்புகள் பெரும்பாலும் வானரங்களுக்கு இணையானதாக அமைந்தபோதிலும் அதனோடு சார்புரீதியாக அதிகமான மானிட உடற்பண்புகளைக்கொண்ட இனமாக கென்யன்த்றோபஸ் இனத்தை இனங்காண முடியும். மூன்று மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வசித்த இந்த இனத்திற்கு தட்டையான முகமும் சிறிய பற்களும் அமைந்திருந்தமை அதற்கான உதாரணமாகும். 1998 இல் கென்யாவின் Lufhdh நீர்நிலையை சார்ந்ததாக முதற்தடவையாக இந்த இனத்தின் தொல்லுயிர் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன. அதைப்போலவே இந்த இனத்தைச் சேர்ந்த தொல்லுயிர் எச்சங்கள் முதல்த்தடவையாக கென்யாவில் கிடைத்தமையும் மேலும் பல ஆதி மானிட இனங்களின் தொல்லுயிர் எச்சங்கள் கென்யாவிலிருந்து கிடைத்தமையும் காரணமாக அதனைக் குறிப்பதற்காக இந்த இனம் கென்யன்த்றோபஸ் என பெயரிடப்பட்டுள்ளது.

முதற்தடவையாக இந்த இனத்தைச் சேர்ந்த தொல்லுயிர் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டவேளையில் அது ஆஸ்த்ரலொபிதிகஸ் இனத்தைச் சேர்ந்ததாக அமைந்திருக்குமென விஞ்ஞானிகள் நம்பியபோதிலும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் ஊடாக அது அவ்வாறானதல்லவென்பது உறுதியாயிற்று. அதற்கிணங்க 2001 ஆம் ஆண்டில் இருந்து மானிட பரிணாமத்தின் இடையில் புதியதோர் இனமாகத் தோன்றிய பிற்காலத்தில் மறைந்துபோன மற்றுமோர் இனமாக கென்யன்த்றோபஸ் கருதப்பட்டது. அதன்படி கென்யன்த்றோபஸ் இனத்தைச்சேர்ந்த உப இனமாக கென்யன்த்றோபஸ் பிளெட்டியொபஸ் மற்றும் கென்யன்த்றோபஸ் றுடொல்ஃபென்சிஸ் பெயர்குறிக்கப்பட்டபோதிலும் பிற்காலத்தில் றுடொல்ஃபென்சிஸ் என்பது மற்றுமொரு ஹோமோ இனமாக பிளெட்டியொபஸ் மாத்திரமே இனங்காணப்பட்டுள்ளது.

### கென்யன்த்றோபஸ் பிளெட்டியொபஸ் (Kenyanthropus platyops)

இற்றைக்கு 3.5 - 3.2 மில்லியன் வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆஸ்த்ரலொபிதிகஸ் அஃபரன்சிஸ், ஆஸ்த்ரலொபிதிகஸ் டெயிறெமீடா, ஆஸ்த்ரலொபிதிகஸ் பஹ்றெல்காசாலி, ஆஸ்த்ரலொபிதிகஸ் அப்ரிகானுஸ் ஆகிய இனங்களும் புவியில் வசித்த காலத்தில் இணையான மற்றுமொரு அயலவராக கென்யன்த்றோபஸ் பிளெட்டியொபஸ் வசித்திருக்கக்கூடுமென நம்பப்படுகின்றது. 1998 இல் கண்டெடுக்கப்பட்டு பிற்காலத்தில் கென்யன்த்றோபஸ் இனத்தைச் சேர்ந்ததெனக் கருதப்பட்ட KNM - WT 38350 என அழைக்கப்படுகின்ற மேல்தாடையின் தொல்லுயிர் எச்சம் கென்யன்த்றோபஸ் பிளெட்டியொபஸ் உப இனத்தைச் சேர்ந்ததென கருதப்பட்டது. இந்த இனத்திற்கு நிகழ்கால மானிடன் போன்று சப்பையான முகம் காணப்பட்டதால் கிரேக்க மொழியில் தட்டையான எனும் அர்த்தத்தைத் தருகின்ற “பிளெடூஸ்” எனும் பதத்தையும் முகம் எனும் அர்த்தத்தை தருகின்ற “ஒப்சிஸ்” எனும் பதத்தையும் ஒன்றுசேர்த்து “பிளெட்டியொபஸ்” எனும் பெயர் உருவாக்கப்பட்டுள்ளது.

கென்யன்த்றோபஸ் பிளெட்டியொபஸ் தொல்லுயிர் எச்சங்கள் கண்டுபிடிக்கப்படும்வரை நிகழ்கால மனிதனுக்கு இணையானவகையில் தட்டையான முகத்தைக்கொண்ட இனங்களாக இற்றைக்கு 2 மில்லியன் வருடங்களுக்கு குறைவான காலத்தில் வசித்த மானிட இனம் மாத்திரமே விஞ்ஞானிகளால் இனங்காணப்பட்டிருந்தது.

கன்யன்த்றோபஸ் பிளெட்டியொபஸ் இனத்தை புவிமேற்பரப்பில் ஒட்டுமொத்த காலப்பகுதியிலும் அவர்களுடன் வசித்த ஆஸ்த்ரலொபிதிகஸ் அஃபரன்சிஸ் இனத்துடன் ஒப்பிடுகையில் ஒன்றுக்கொன்று வித்தியாசமான உணவுப் பாங்குகள் நிலவியிருக்கக்கூடுமென நம்பப்படுகின்றது. அஃபரன்சிஸ் இனத்துடன் ஒப்பிடுகையில் பிளெட்டியொபஸ் இனத்திற்கு சிறிய வெட்டும் பற்கள் அமைந்திருந்தமை இதற்கான பிரதான காரணமாகும். எனினும் இந்த



**கென்யன்த்ரோபஸ் பிளெட்டியொபஸ் மண்டையோடு**

இரண்டு இனங்களும் தமது பிரதான உணவு வகையாக பூண்டுகளையும் தாவர இலைகளையும் உணவாகக் கொண்டிருக்கக்கூடும். அவர்களில் சுற்றாடலில் இருந்து கிடைக்கின்ற கற்கள் மற்றும் மரத்தண்டுகளை ஆயுதங்களாக பாவித்திருக்கக்கூடுமென நம்பியபோதிலும் கூர்மைக்கப்பட்ட கல் ஆயுதங்களை பாவித்தமைக் கான சான்றுகள் கிடைக்கவில்லை. பெண்கள்-ஆண்கள், சிறுவர்-முதியவர்கள் ஒரு கலப்புச் சமுதாயமாக பிளெட்டியொபஸ் வாழ்ந்திருக்கக் கூடுமெனவும் நம்பப்படுகின்றது. புல்நிலங்கள் போன்றே வனாந்தரங்களையும் சார்ந்ததாக அவர்கள் வாழ்ந்துள்ளார்கள். தொல்லுயிர் எச்சங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாக காணப்படுவதால் பி



**கென்யன்த்ரோபஸ் பிளெட்டியொபஸ் மண்டையோடு சார்ந்ததாக உருவாக்கப்பட்ட உருவமொன்று**

ளெட்டியொபஸின் உடல்பண்புகள் பற்றி மேலும் வெளிக்கொணரப்படவேண்டிய பல விடயங்கள் உள்ளபோதிலும் தற்போது அறிந்துள்ள விடயங்களின்படி அவர்கள் இரண்டு கால்களாலும் நடந்துசென்ற இனமாகும். அத்துடன் ஆஸ்த்ரலொ பிதிகஸ் அ∴பரன்சிஸ் இனத்திற்கு இணையானதாக பிளெட்டியொபஸின் மண்டையோட்டுக் கொள்ளளவும் ஏறக் குறைய 450 கன சென்றிமீற்றராகும். தடிப்பான மிளிரியைக்கொண்ட பற்கள் இவர்களுக்கு இருந்துள்ளன.

கென்யன்த்ரோபஸ் பிளெட்டியொபஸ் எந்த இனத்தின் ஊடாக பரிணாமமடைந்ததென்பதை உறுதிசெய்துகொள்ளக்கூடிய சான்றுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆஸ்த்ரலொபிதிகஸ் அ∴பரன்சிஸ் ஊடாக இவர்கள் பரிணாமமடைந்திருக்கக்கூடுமென்று பெரும்பாலான விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். உடல் தோற்றத்தின்படி அதற்கு ஒரு மில்லியன் வருடங்களுக்குப் பின்னர் வசித்த ஹோமோ ரெடொல்பெ∴ன்சிஸ் இனத்துடன் பெரும்பாலான இணையான பண்புகள் நிலவுவதால் அவர்கள் கென்யன்த்ரோபஸ் பிளெட்டியொபஸ் ஊடாகவே பரிணாமமடைந்திருக்கக் கூடுமென்ற அபிப்பிராயம் நிலவுகின்றது.

அதைப்போலவே இந்த இரண்டு இனங்களும் நிகழ்கால மானிடனின் உடற்பண்புகளுடன் பெருமளவில் இணையானதாக அமைவதால் நிகழ்கால மானிடனின் பரிணாமம் இந்த இரண்டு இனங்கள் ஊடாகவே இடம்பெற்றதென பெரும்பாலான விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். எனினும் அந்த வரிசையின் இடைநடுவிலான கட்டங்களை பூர்த்திசெய்கின்ற சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை என்பதோடு அவ்விதமாக கிடைத்தால் இதுவரை பெரும்பாலான விஞ்ஞானிகள் நம்புகின்றவிதத்தில் மனித இனம் தோன்றியது ஆஸ்த்ரலொபிதிகஸ் இனத்தின் ஊடாகவே எனும் கருத்தினை புறந்தள்ள நேரிடும்.

(மற்றுமொரு பகுதியை அடுத்த இதழில் எதிர்பார்க்கவும்.)

---

03ஆம் பக்க தொடர்ச்சி.. **இந்திய - இலங்கை புதிய...**

அணுகலுக்கான கற்கையினை முதலில் மேற்கொள்ளல்.

■ வர்த்தக, பொருளாதார மற்றும் நிதி சார் தொடர்புகள் (Trade, Economic and Financial People Connectivity)

(அ) இருநாடுகளுக்குமிடையிலான முதலீடுகளை விரிவாக்குதல்.

(ஆ) பல்வேறு பிரிவுகளில் அரசாங்கத்திற்குச் சொந்தமான பொறுப்பு முயற்சிகளில் இந்திய முதலீடுகளைக் கொண்டுவருதல்.

(இ) பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ளல். இந்திய ரூபாவை இருநாடுகளுக்கும் இடையிலான பரிமாற்ற பண அலகாக ஏற்றுக்கொள்ளல்.

(ஈ) டிஜிட்டல் பகிரங்க உட்கட்டமைப்புகளை (Digital Public Infrastructures) இலங்கையின் தேவைக்கிணங்க வழங்குதல்.

■ வலுச்சக்தி மற்றும் வலுச்சக்தி தொடர்பு (Power and Power Connectivity)

புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி தோற்றுவாய்களின் அபிவிருத்திக்காக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை செய்துகொள்ளல். குறிப்பாக காற்றுவிசை மற்றும் சூரிய சக்தி தோற்றுவாய்களை மேம்படுத்துவதன் மூலமாக 2030 அளவில் இலங்கையின் வலுச்சக்தி தேவையில் நூற்றுக்கு 70 வீதத்தை அந்த துறைகளிலிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உயர் கொள்திறன்கொண்ட மின்சார வலையமைப்புகளை உருவாக்குதல். அதன் மூலமாக இலங்கையில் உற்பத்திசெய்த மின்சாரத்தை இந்தியாவுக்கு மாத்திரமன்றி பிராந்தியத்தைச் சேர்ந்த ஏனைய நாடுகளுக்கும் விற்பனைசெய்து அந்நிய செலாவணியை சுருட்டிக்கொள்ள வாய்ப்பினை பெற்றுக்கொள்ளல்.

சாம்பூர் சூரிய சக்தி கருத்திட்டம் மற்றும் இயற்கைத் திரவவாயு (LNG) பிறப்பாக்கத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக்கான உடன்படிக்கைக்கிணங்க செயலாற்றுதல். அதன்போது பசுமை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அமோனியா வலுச்சக்தி உற்பத்தியை மேம்படுத்துதல்.

தற்போது நடைமுறையில் உள்ள திருகோணமலை எண்ணெக் குதங்கள் தொகுதி கருத்திட்டத்தை பரஸ்பர அவசியப்பாடுகளுக்காக சாதகமான நிலைமைகளின்கீழ் முன்னெடுத்து வருதல். தேசிய மற்றும் சர்வதேச தொழில்நுட்ப கேந்திரநிலையமாக திருகோணமலையை அபிவிருத்தி செய்தல். இந்த உடன்பாடுகளை துரிதமாக நடைமுறைப்படுத்த இருநாடுகளின் தலைவர்களும் இணங்கியுள்ளார்கள்.




## மீண்டும் மின்சாரத்தினால் ஒன்றுபடுகின்ற பிரேசிலும் வெனிசியுலாவும்

வெனிசியுலாவின் நீர்மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை பிரேசிலின் வடக்குப் பிரதேசங்களுக்கு பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க இருநாடுகளும் தீர்மானித்துள்ளன. ஐக்கிய நாடுகளின் மாநாட்டுக்காக நிவ்யோர்க் நகரத்திற்கு வருகைதந்துள்ள பிரேசிலின் சுரங்கங்கள் மற்றும் வலுச்சக்தி அமைச்சர் அலெக்சாண்டர் சில்வேரியாவே இதனை வெளிப்படுத்தினார்.

இந்த கருத்திட்டத்தின்கீழ் பிரேசிலின் தேசிய மின்சக்தி முறைமையுடன் இணைந்திராத வடக்கு றொரய்மா மாநிலத்தின் வலுச்சக்திப் பாதுகாப்பினை உறுதிசெய்ய எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் பிரேசிலின் முன்னாள் வலதுசாரி சனாதிபதி பொல்செனாறோ 2019 இல் வெனிசியுலாவிடமிருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்கின்ற கருத்திட்டத்தை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தார். அது ஐக்கிய அமெரிக்காவை உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகள் வெனிசியுலாவிற்கு எதிராக விதித்திருந்த தடைகளுக்கு அமைந்தொழுகியே ஆகும்.

கடந்த சனவரி 01 ஆம் திகதி லூலா த சில்வா பிரேசிலின் சனாதிபதி பதவியின் கடமைகளை தொடங்கியதும் லத்தீன் அமெரிக்காவின் இடதுசாரி நாடுகளுடனாக உறவுகளை மீண்டும் வளர்த்துக்கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கிணங்க கடந்த ஏப்பிரல் மாதத்தில் பிரேசிலின் லூலா த சில்வா மற்றும் வெனிசியுலாவின் நிக்கலஸ் மதுரோ ஆகிய சனாதிபதிகள் இருவராலும் இரு நாடுகளுக்கிடையில் மின்சார முறைமையை மீண்டும் இணைப்பதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டது. 04 வருடங்களுக்கு மேலாக இந்த மின்சார முறைமை பராமரிக்கப்படாமையால் மின்சார கடத்துகையை இயல்புநிலைக்கு மீட்க குறைந்த பட்சம் 04 மில்லியன் டொலர் செலவாகுமெனக் கூறப்படுகின்றது.

## உலக மக்களது நல்அபிப்பிராயம் கியூபாவுக்கு

கடந்த ஒற்றோபர் 26 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட கியூபாவிற்கு எதிரான ஐக்கிய அமெரிக்க பொருளாதாரத் தடைகளுக்கு எதிராக வருடந்தோறும் முன்வைக்கப்படுகின்ற பிரேரணைக்கு சார்பாக பெரும்பான்மையான நாடுகள் வாக்கு அளிக்கப்பட்டுள்ளன. மேற்படி பிரேரணைக்கு சார்பாக 187 வாக்குகள் கிடைத்துள்ளதோடு ஐக்கிய அமெரிக்காவும் இஸ்ரவேலும் மாத்திரமே எதிர்த்துள்ளன. இந்நேரத்தில் அத்தியாவசியமாகியுள்ள ஐக்கிய அமெரிக்காவின் உதவிகள் கிடைக்காமல் போகக்கூடிய அபாயநேர்வு காரணமாகவே யுக்கிரெயின் வாக்களிப்பதை தவிர்த்துக்கொண்டிருக்கக்கூடும்.

இந்த பிரேரணை 31 வருட காலமாக முன்வைக்கப்படுகின்ற ஒன்றாக மாறியுள்ளதோடு ஆண்டுக்கு ஆண்டு தடைகளை நீக்குவதற்கு ஆதரவாக கிடைகின்ற வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கடந்த வருடத்தின் வாக்கெடுப்பு முடிவுகளுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இறுதிப் பெறுபேறு தீர்வுக் கட்டமானதாக புலப்படுகின்றது. கடந்த வருடத்தில் பிரேரணைக்கு எதிராக 03 நாடுகள் வாக்களித்திருந்ததோடு மேலும் 03 நாடுகள் வாக்களிப்பதை தவிர்த்திருந்தன.

பெரும்பாலான பிரதிநிதிகளின் கரகோஷங்களுக்கு மத்தியில் எழுந்த பேரொலியுடனேயே இந்த பெறுபேறு பொதுச்சபையின் கூட்டத்தொடர் திரையில் காட்சிப்படுத்தப்பட்டது. வாக்கெடுப்பிற்கு முன்னர் உரைநிகழ்த்திய கியூபாவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் புறூனோ றொட்ரிகோஸ் கியூபாவிற்கு எதிரான தடைவிதிப்பு கியூபாவின் மக்கள் அனைவரதும் உயிர்வாழ்வதற்கான, சுகாதார வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான, கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான நல்வழியுரிமையை மீறுதலாக அறிமுகம் செய்தார். அவர் தடைகளை “அமைதியான காலத்தின் யுத்தரீதியான நடத்தை” என எடுத்துரைத்தார்.

1962 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பொருளாதார, நிதிசார் மற்றும் வர்த்தக தடைகள் மூலமாக கியூபாவிற்கு டொலர் மூலமாக கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல், ஐக்கிய அமெரிக்கா ஊடாக கொண்டுவரப்படுகின்ற ஐக்கிய அமெரிக்க நிதி முறைமை பாவித்த மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட துணைச்சாதனங்களை 10% இற்கு மேலாக பாவித்த உற்பத்திகளைக் கொள்வனவுசெய்தல் உள்ளிட்ட பல செயற்பாடுகள் தடைசெய்யப்பட்டுள்ளன. கியூபாவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பொதுச்சபையின் மத்தியில் சமர்ப்பித்த அறிக்கையின்படி இந்த ஐக்கிய அமெரிக்க தடைகள் காரணமாக 2022 மார்ச்சு தொடக்கம் 2023 பெப்ரவரி வரையான ஒரு வருட காலப்பகுதிக்குள் கியூபாவிற்கு விளைந்துள்ள மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் 4,867 மில்லியன் டொலர்களாகும்.

கியூபாவிற்கு ஆதரவாக கருத்துரைத்த பெரும்பாலான நாடுகள் ஐக்கிய அமெரிக்காவின் நெருங்கிய நண்பர்களாக இருந்தபோதிலும் தடைவிதித்தமையானது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினால் அங்கீகரிக்கப்படாத, ஏனைய நாடுகள்மீது தலையீடு செய்கின்ற, ஒருதலைப்பட்சமான தீர்மானம் என விமர்சித்தன. அதன்மூலமாக கியூபாவின் அரசாங்கத்திற்குப் பதிலாக கியூபாவின் மக்கள் தண்டிக்கப்படுகிறார்கள் என்பது அவர்களின் கருத்தாக அமைந்தது.

இந்த பொதுச்சபை பிரேரணை நிறைவேற்றத்தின் அடையாளரீதியான பெறுமதி தவிர்ந்த சட்டரீதியான கடப்பாடு கிடையாதென்பதோடு இதுவரை கியூபா தொடர்பான ஐக்கிய அமெரிக்க கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் வெற்றிபெறவில்லை.

கம் கடந்த வருடத்தில் 2023 சனவரி தொடக்கம் யூலை வரை அரச வருமானமாக 1,516 பில்லியன் ரூபாவையே பெற்றுள்ளது. அதற்கிணங்க 2023 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த வருமானமாக எதிர்வரும் ஐந்து மாதங்களுக்காக 1,500 பில்லியன் ரூபாவை ஈட்டிக்கொண்டாலும் மொத்த வருமானம் 3,000 பில்லியன் ரூபாவை நெருங்குவது மிகுந்த சிரமத்துடனாகும். நிலைமை அவ்வாறு இருக்கையில் ஆறாயிரத்து ஐந்நூறு பில்லியன் ரூபாவை ஈட்டிக் கொள்வது எவ்வாறு என்பது சிரமமானதாகும். அதைப்போலவே 2023 ஆம் ஆண்டில் சனவரி தொடக்கம் யூலை வரை மொத்த மீண்டெழும் செலவுகள் 2,674 பில்லியன் ரூபாவாக அமைந்துள்ளதோடு அதன்மீது ஒரு வருடத்திற்காக எதிர்வுகூறக்கூடிய பெறுமானம் ஏறக்குறைய 4,500 பில்லியன் ரூபாவாகும். அவ்வாறு இருக்கையில் 2024 ஆம் ஆண்டுக்கான மீண்டெழும் செலவினமாக 5,354 பில்லியன் ரூபா வரவுசெலவில் ஒதுக்கப்படுதல் கருத்திற்கொள்ளப்படவேண்டிய விடயமாகும். அதனால் இந்த அனைத்து விடயங்களையும் கவனத்திற்கொண்டால் வரவு-செலவு மூலமாக நாடு எதிர்பார்ப்பதை பெற்றுக்கொள்ள முடியுமா என்பது சிக்கலானதாகும்.

08ஆம் பக்க தொடர்ச்சி **அரசு என்றால் என்ன?...**

அமையமாட்டாது. அரசு என்பது சமூக அபிவிருத்தியின் பெறுபேறாக ஒரு கால கட்டத்தில் தோன்றுவதாகும். அரசு என்பது தீர்த்துவிட முடியாத முரண்பாடுகளில் சமூகம் அகப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வதாகும். அத்துடன் அந்த சமூகம் ஒற்றுமைப்படுத்த முடியாமல்போன முரண்பாடுகளின் இரண்டு பக்கங்களுக்கு சிதைந்து சென்று அதிலிருந்து விடுபடுமளவுக்கு பலமிக்க சிக்கல் நிறைந்ததாக மாறியுள்ளமையை ஏற்றுக்கொள்ளலாகும். முரண்பாடான பொருளாதார தேவைகள் நிலவுகின்ற வர்க்கங்களின் எதிர்ப்புகள் ஒருவரையொருவர் போன்றே சமூகத்தையும் கபளீகரம் செய்கின்ற வளமற்ற போராட்டத்தில் ஈடுபடுவதை தடுப்பதற்காக சமூகத்திற்கு மேலாக நின்று மோதல்களின் வீரியத்தைக் குறைத்து "சமாதானத்தின்" அரண்களுக்குள் வைத்திருப்பதற்கான சக்தியொன்று தேவைப்பட்டது. சமூகத்திலிருந்து தோன்றினாலும் அதற்கு மேலாக நின்று படிப்படியாக சமூகத்திலிருந்து தூரவிலகிக் கொண்டிருக்கின்ற அந்த சக்தியே "அரசு".

அதற்கிணங்க அரசு என்பது மிதிக்கப்பட்டுள்ள வர்க்கத்தைச் சுரண்டுவதற்கான வர்க்கக் கருவியாகும். அதற்கமைவாக அரசு பிற்போக்கானதாக அமையும். அது அடக்குமுறைசார்ந்த நிறுவனமாகும். இது ஏதேனுமொரு வர்க்கத்தின் வர்க்க சர்வாதிகாரமாகும். பூர்வீகக் கூட்டுச் சமூகம் சிதைவடைந்து அடிமைச் சமூகம் உருவாகியதும் அரசு தோன்றியதோடு நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளித்துவ உற்பத்தி முறைமைக்கு நேரொத்தவகையில் அரசும் மாற்றமடைந்தது.

**அரசின் கட்டமைப்பு**
**(அரசு அமைந்துள்ள விதம்)**

ஒருசில நிறுவனங்களின் சேர்க்கை மூலமாகவே அரசு உருவாகியுள்ளது. அதாவது இராணுவம், பொலீஸ், சிறைச்சாலைகள், நீதிமன்றம் மற்றும் சட்ட முறைமை, அதிகார வர்க்கத்தின் அவசியத்திற்காக கட்டியெழுப்பப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் என்பவை மூலமாக இந்த தாபன முறைமை உருவாக்கப்படுகின்றது.

**அரசிற்கும் அரசாங்கத்திற்கும்**
**இடையிலான வித்தியாசம்**

அரசு மற்றும் அரசாங்கம் என்பது ஒன்றல்ல இரண்டாகும். அதேவேளையில் இந்த இரண்டு நிறுவனங்களும் ஒருமைப்பாட்டுடன் நிலவுகின்றன. சமூகப் புரட்சியின்போதே ஓர் அரசிற்குப் பதிலாக புதிய அரசு பிரதியீடாக அமைகின்றது. (உதாரணமாக நிலப்பிரபுத்துவ அரசு மாற்றமடைந்து முதலாளித்தவ அரசு தோன்றியமை). அரசாங்கம் என்பது அரசுடன் தொடர்புடைய ஒரு சாதனமாகும். அது மாறக்கூடியது. அரசியலமைப்பு மூலமாக சட்டமாக்கப்பட்டு 4 - 5 வருடங்கள், எனப்படுகின்ற குறுகிய காலச் சட்டகத்திற்கொருதடவை அது மாற்றமடையும். அரசு மற்றும் அரசாங்கத்திற்கிடையிலான தொடர்பின்போது அரசினை நெறிப்படுத்துதல் அரசாங்கத்தினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் இவையிரண்டும் ஒன்றுக்கொன்று நேரொத்தாக அமையவேண்டும், நோக்கங்கள் இணையானதாக அமையவேண்டும். இல்லாவிட்டால் பாரதூரமான முரண்பாடுகள் உருவாகும். உதாரணமாக முதலாளித்துவ அரசில் சோஷலிஸ அரசாங்கம் முரண்பாடாணதாக அமையும். அது மோதலின்றி நிலவவேண்டுமாயின் சோஷலிஸ அரசாங்கத்தின் நோக்கங்களுடன் நேரொத்ததாக அரசும் மாற்றமடையவேண்டும். வர்க்கங்கள் ஒழியும்போது அரசும் இல்லாதொழியும்.

02ஆம் பக்க தொடர்ச்சி...**நீரை விற்பனை செய்கின்ற....**

அதற்காக செயலாற்றுவதற்கான நீதிமன்ற முறைமைகூட முன்மொழியப்பட்டது. புதிய சட்டமூலத்தில் தற்போது அவ்வாறான ஒன்று இல்லாவிட்டாலும் செயற்பாங்கானது அந்த திசையை நோக்கியே நகர்வது தெளிவாகின்றது. உத்தேச கொள்கை கீழே குறிப்பிடப்படுகின்ற ஒன்பது விடயங்கள் ஊடாக வரிசைப்படுத்தப்படுகின்றது.

1. அறிமுகம்.
2. நீர் வளங்களின் நிகழ்கால நிலைமை சார்ந்த அவதானிப்புகள்.
3. நியாயப்படுத்துகை.
4. விடயப்பரப்பு.
5. கொள்கைச் சித்தாந்தங்கள்.
6. கொள்கைப் பிரகடனம்:
   (i) அரசினதும் அரசாங்கத்தினதும் பொறுப்பும் செயற்பொறுப்பும்.
   (ii) நலன்பெறுனர்களின் பொறுப்பும் செயற்பொறுப்பும்.
   (iii) நீர் உரிமைகளும் பொறுப்பும்.
   (iv) உயர்வான விதத்தில் நீர் வளங்களைத் திட்டமிடுதல்.
   (v) அவசியப்பாடுகள் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் நீர் பரிமாணங்களை வேறாக்குதல்.
   (vi) நீர் வளங்கள்சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளின் பேணுகை, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவக் கிரயத்தை தரப்பினர்களுக்கிடையில் பாவித்தல் அல்லது வேறு இணங்கக்கூடிய முறையியல்கள் மூலமாக பகிர்ந்துகொள்ளல்.
   (vii) தரவுகள் மற்றும் தகவல்கள் முகாமைத்துவம் மற்றும் தரப்பினர்களுக்கிடையில் தரவுப் பரிமாற்றம்.
   (viii) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள்.
   (ix) ஆளணி மற்றும் ஆளணிக் கொள்திறன் அபிவிருத்தி.
7. அமுலாக்கல் உபாயமுறைகள்.
8. தேசிய நீர் வளங்கள் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான தாபனக் கட்டமைப்பு.
9. புதிய ஆற்று வடிநிலங்கள் முகாமைத்துவ உபாயமுறைகள்.

# அரசு என்றால் என்ன?

சமூக மாற்றப் பணியில் (சோஷலிஸ புரட்சியில்) முனைப்பாக பங்களித்துள்ள நாங்கள் "அரசு" பற்றிய மிகவும் தெளிவான புரிந்துணர்வினைக் கொண்டிருத்தல் வேண்டும். "அரசு என்றால் என்ன" "அது எவ்வாறு தோன்றியது?" "அரசு சதாகாலமும் நிலவியதா?" "அது பற்றிய மாக்சிஸ நிலைப்பாடு என்ன?" ஆகிய கேள்விகளுக்கு தெளிவான பதில்களைக் கண்டறிதல் வேண்டும். இந்த சிறிய கோட்பாட்டு சார்ந்த கட்டுரை அதற்கான தாகும்.

**அரசு உருவானமை பற்றிய மாக்சிஸமற்ற அபிப்பிராயம்**

அரசு பற்றியும் அது உருவாகியமை பற்றியும் முதலாளித்துவ அரசியல் சிந்தனையில் பல அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. 1919 யூலை 11 ஆம் திகதி ஸ்வெர்த்லொவ் பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கு "அரசு பற்றி லெனின் ஆற்றிய உரையின்போது அது பற்றிக் கூறியிருந்ததும், "அரசு" பற்றிய பிரச்சினை அளவுக்கு முதலாளித்துவ விஞ்ஞானம், தத்துவம், சட்டவியல், அரசியல் பொருளியல் மற்றும் செய்தித்தாள் கலை மூலமாக கருத்தொன்றிய வகையிலும் அறியாதவகையிலும் குழப்பியடித்த வேறோரு பிரச்சினையை உங்களால் தேடிக்கொள்ள முடியாதென நான் ஆரம்பத்திலேயே கூறினேன். இற்றைவரை பெரும்பாலும் அது மதப் பிரச்சினையுடன் மாட்டிவிடப்படுகின்றது. மத தர்மத்தைக் கடைப்பிடிப்பவர்கள் (அவர்கள் அவ்வாறுசெய்ய எதிர்பார்க்கக்கூடும்.) மாத்திரமன்றி தாம் மதம்சார்ந்த தப்பான கருத்துக்களியிருந்து விடுபட்டவர்களாக நினைப்பவர்கள்கூட அரசு தெய்வீகத்திற்கு உரித்தானதெனவும், இனந்தெரியாத ஒன்றெனவும், அது மனித அர்த்தத்திற்கு சொந்தமற்றதும் மனித னுக்கு புறத்தேயிருந்து அளிப்புச் செய்கின்ற இன்றேல் கொண்டுவரப்படுகின்ற தெய்வீக தோற்றத்தைக்கொண்ட சக்தியாகுமெனவும் அது மனித வர்க்கத்தின் வழியுரிமைக்கு காரணமாக அமைந்த ஏதேனுமொரு சக்தியெனவும் கூறுகின்ற தர்மமொன்றை உருவாக்க முயற்சிசெய்து அரசுடன் சம்பந்தப்பட்ட குறித்துரைத்த பிரச்சினையை சிக்கலானதாக்குகிறார்கள்"

**I. இறைவாதம்**

அரசு கடவுளின் படைப்பு என இதில் கூறப்படுகின்றது. மேற்படி லெனினின் வெளிப்பாட்டிலும் இந்த தவறான கருத்தியலின் சாரமே அடங்கியுள்ளது.

**II. சமதர்மவாதம்**

மனிதர் மத்தியிலான பொது இணக்கப்பாடு மூலமாகவே அரசு உருவாகியது என்பதே இதன் மூலமாக கூறப்படுகின்றது. இந்த கருத்தியலின்படி அரசு சதாகாலமும் நிலவவில்லை. அரசு இல்லாத காலப்பகுதியொன்றும் நிலவியது. பின்னர் சமூகத்தில் முரண்பாடுகள் உருவாகின. அதனைத் தணிப்பதற்கான இணக்கப்பாடாக அரசு உருவாகியது. இந்த கருத்தினை முன்வைத்த அரசியல் சிந்தனையாளர்கள் சிலர் இருந்தார்கள். அந்த கருத்துக்கள் மத்தியில் வித்தியாசமும் நிலவியது.

**■ தோமஸ் ஹொப்ஸ் (இங்கிலாந்து)**

மனிதன் பிறவியிலேயே சுயநலம் படைத்தவன் எனக் கூறுகிறார். அரசு இணக்கப்பாட்டின் பங்காளியல்ல, அதன் பெறுபேறு என கூறுகின்ற இவர் அரசு சர்வபலம் பொருந்தியது எனவும் அதற்கு மக்கள் கட்டுப்பட வேண்டுமெனவும் கூறுகிறார். அதன் மூலமாக சர்வாதிகார அரசின் வழியுரிமையை நியாயப்படுத்துகிறார்.

**■ ஜோன் லொக் (இங்கிலாந்து)**

ஆதனங்களின் பேரில் சமூகத்தில் முரண்பாடுகள் தோன்றியதெனவும் அதன்போது மக்களுக்கும் அரசுக்கும் இடையில் இணக்கப்பாடு தோன்றியதெனவும் கூறுகிறார். அரசு இணக்கப்பாட்டின் பங்காளியே. அதனால் அரசு இணக்கப்பாட்டினை மீறுமாயின் அவ்வாறான அரசினைக் கவிழ்க்க மக்கள் கொண்டுள்ள உரிமையை ஏற்றுக்கொள்கிறார்.

**■ றூசோ (ஜேர்மனி)**

றூசோவும் மேற்படி கருத்தியலையே முன்வைக்கிறார். இணக்கப்பாடு நிலவுவது சமூகத்துடன் என்பதால் அரசு சமூகத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். அரசினைக் கவிழ்ப்பதற்கான மக்களின் உரிமையை ஏற்றுக்கொள்கிறார்.

இதற்கு மேலதிகமாக "அதிகாரவாதம்", "தாய்வழியாட்சிமுறை" எனும் பெயர்களிலும் கருத்தியல்கள் நிலவுவதோடு அவையனைத்துமே தவறான கருத்தியல்களாகும்.

**அரசு பற்றிய மாக்சிஸ கருத்து**

அரசு என்பது வர்க்க முரண்பாடுகளின் ஒற்றுமையின்மையின் பெறுபேறு ஆகும். (வர்க்கங்களுக்கிடையிலான ஒற்றுமையின்மை காரணமாக அரசு தோன்றிய போதிலும் அரசின் பணியாக அமைவது வர்க்கங்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதன்றி ஒரு வர்க்கத்தை மிதித்துக்கொண்டிருப்பதற்காக சொத்துக்கள் உரித்தான வர்க்கத்திற்கு சேவை புரிவதாகும். லெனினின் "அரசும் புரட்சியும்" நூலில் ஏங்கல்ஸை மேற்கோள்காட்டி இந்த கருத்தினை நன்றாக விளக்கியுள்ளார்.

"அரசு இதன் காரணமாக சமூகம் மீது வெளியிலிருந்து சுமத்திய ஏதேனும் அல்ல. ஹெகல் கூறியவாறு அரசு உண்மையான ஆன்மீக அபிப்பிராயமாக அமைவதில்லை என்பதைப்போன்றே விவேக தர்க்கத்தின் உண்மைநிலையாகவோ அல்லது பிரதிபிம்பமாகவோ



"அரசு பொதுவான பலத்தை கையகப்படுத்திக்கொண்டு, வரி இறுப்பனவு பலத்தை தனதுரிமையாக்கிக் கொண்டிருக்கின்ற உத்தியோகத்தர்கள் சமூகத்தின் அமைப்பாண்மைகள் கூட்டுத்தாபனங்களாக தற்போது சமூகத்திற்கு மேலாக இருக்கின்றன என ஏங்கலஸ் கூறுகிறார். பழங்குடிமரபிலான அமைப்பாண்மைகளில் இருந்து சுயவிருப்பத்தின்படியே மதிப்பளித்தல் போன்றவற்றை அவர்களால் வென்றெடுக்க இயலுமானபோதிலும் அவர்களுக்கு அது திருப்திகரமானதாக அமையமாட்டாது. உத்தியோகத்தர்களின் பரிசுத்தமானதன்மை மற்றும் சுதந்திரமான சிறப்புரிமைகள் என்பவற்றைக் கூட்டிணைத்து சிறப்புச் சட்டங்கள் ஆக்கப்பட்டன. மிகவும் அழுக்கடைந்த பொலீஸ்காரனுக்குக்கூட பழங்குடிச் சமூகத்தின் பிரதிநிதியைப் பார்க்கிலும் "ஆதிக்கம்" இருக்கின்றது. எனினும் நாகரிகமடைந்த யுத்தப் படையணிப் பிரதானியைவிட "பலவந்தமாக பெற்றுக்கொள்ளாத" நன்மதிப்பு சமூகத்திலிருந்து பழங்குடித் தலைவனுக்கு கிடைத்தது."

("லெனின் - அரசும் அரசாங்கமும்" என்ற நூல் )